மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆண்டுதோறும் வழங்கும் ஒருமுறை தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எங்காவது குறைபாடு இருந்தால் சுட்டிக்காட்டினால், அதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனை.

* 238 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம், எக்ஸ்ரே பகுதி, போன்றவை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமங்கலத்தில் இரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ் கதிர் வீச்சு நிலையக் கட்டடமும் கட்டும் திட்டம் 1970-71 நிதியாண்டில் பரிசீலனைக்காக ஒத்திப் போடப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : வளர்ந்து வரும் மக்கள் தொகையைக் கருத்தில்கொண்டு திருமங்கலம் தாலுக்கா தலைநகரமாக இருப்பதால் ரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ்-ரே நிலையமும் விரைவாக ஏற்பட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் 1966-லேயே ரத்த நிலையம் ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. 1967-68-இல் எக்ஸ்-ரே நிலையம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. 1968-69-ல் இந்த இரண்டையும் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அகதிகள்.

* 239 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானலில் இலங்கை அகதிகளைக் குடியேற்றி விவசாயம் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) கொடைக்கானல் தாலுகாவிலுள்ள வண்டரவ் காட்டில் தேயிலைத் தோட்டம் அமைக்கும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : இலங்கையில் இருந்து இதுவரையிலும் எத்தனை அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார்கள் ? அவர்கள் எங்கு எங்கு குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ?

1969 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இலங்கையில் இருந்து வந்தவர்கள் நெல்லை மாவட்டத்திலேயே அதிகமாக இருக்கிற காரணத்தினால், குற்றாலம் மலைச்சரிவில் தேயிலைத் தோட்டம் ஏற்படுத்த மாவட்ட கலெக்டர் கொடுத்த திட்டம் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றிய குறிப்பு இங்கு இல்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : இலங்கையில் இருந்து வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை அதிகம். கோடைக்கானல் பகுதியில் விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் மிக அதிகமான நிலங்களைக் கையகப்படுத்தி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பகுதியை நீக்கிக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : இந்த நிலங்களை இலங்கை அகதிகளுக்கு வழங்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கொடைக்கானல் மலைப் பிரதேசத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதை உணர்ந்து அரசாங்கம் தனிப்பட்ட அதிகாரியைப் போட்டு, அதுபற்றிய விவரங்களைச் சேகரித்து, அந்த நிலங்களை எடுத்து நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு அளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. அந்த வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஜே. பெள்ளி கௌடர் : கொடைக்கானல் மலைப்பகுதியில் இலங்கையில் இருந்து வந்துள்ள அகதிகளைக் குடியேற்ற எத்தனை ஏக்கரா எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதுள்ள விவகாரம் அங்கே தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம் போடலாமா, கூடாதா என்பதுதான். அங்கே வாட்டில் மரம் தான் வளர்க்க முடியும் என்று காட்டிலாக்கா சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ போர்டில் காப்பித்தோட்டம், தேயிலைத் தோட்டம் போடலாம் என்கிறார்கள். இதுபற்றி இன்னும் முடிவு ஏற்படவில்லை. அந்தப் பிரதேச மண் கோயம்பத்தூர் விவசாயக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. காட்டிலாக்கா அமைச்சரும், நானும் நேரில் போய்ப் பார்த்து ஒரு முடிவு செய்யவிருக்கிறோம்.

புதுக்கோட்டை கோட்டத்திலுள்ள இனாம் கிராமங்கள்

*** 240 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை டிவிஷனில் இனாம் கிராமங்களில் ரீசெட்டில்மெண்டிற்காக அரசு என்னென்ன துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது ?